**நானாட்டான் பிரதேச சபை**

**மன்னார் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 24 பெப்ரவரி 2020 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 29 யூன் 2020 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 17 யூலை 2020 ஆந் திகதியும் சபையின் தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து நானாட்டான் பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் நிதி நிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக்கொள்கைள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இவ் விடயமானது தவறுதலாக கணக்கறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. எதிர்காலத்தில் சீர்செய்யப்படும். | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு பின்பற்றப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் யாவும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும் |

**(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் சபையினால் உழவு இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிராத போதும் அதற்கான கேள்வி கோரல் தொகை ரூபா 2,000,000 செலவுக்கடன் வழங்குனர் கணக்கில் செலுத்த வேண்டியதாக தவறாக காட்டப்பட்டதுடன் தொடந்தும் மீளாய்வாண்டின் செலவுக்கடன் வழங்குனர் கணக்கிற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளமையால் நடப்பு பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் கூட்டிக்காட்டப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் கொள்வனவு செய்தமைக்காக செலுத்த வேண்டியவை மட்டும் காட்டப்படும். | பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

**(இ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (i) சபையினால் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு வகையான பொருட்களின் பெறுமதி ரூபா 423,000 ஆக இருந்த போதும் வருட இருப்பு பெறுமதி கணக்கிற்கு ரூபா 13,500 ஆக கணிக்கப்பட்டு வந்தமையால் ரூபா 409,500 ஆல் சொத்தின் பெறுமதி நிதிக்கூற்றுகளில் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | குறித்த தவறானது 2020 ஆம் ஆண்டிற்கான இறுதிக்கணக்கறிக்கையில் நாளேட்டுப்பதிவுகள் மூலம் சீர்செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் ஏற்படாவண்ணம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | உரிய மீதிகளின் வேறுபாடுகள் இணக்கம் செய்யப்பட்டு கணக்குகளை சரிப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ii) மீளாய்வாண்டின் இறுதியில் பதவியினர் கடன் மீதியானது ரூபா 5,912,740 ஆக இருக்க வேண்டிய போதும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகையில் ரூபா 5,937,647 ஆக காட்டப்பட்டுள்ளமையால் ரூபா 24,907 வேறுபாடுகள் காணப்படுகின்றன. | குறித்த தவறானது 2020 ஆம் ஆண்டிற்கான இறுதி கணக்கறிக்கைகளில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய மீதிகளின் வேறுபாடுகள் இணக்கம் செய்யப்பட்டு கணக்குகளை சரிப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

**1.4 இணக்கமின்மைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் பிரிவு 16(2) | மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை | உரிய காலத்தில் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். | வருடாந்த செயலாற்றல் அறிக்கையை உரிய காலத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் | | | |
| | (i) இலக்கம் 371 | ஏழு ஆண்டுகளுக்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்பட்டிராத ரூபா 1,959,876 முற்பணங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உள்ளூராட்சி ஆணையாளரினால் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது | முற்பணங்களைத் உரிய காலத்தினுள் தீர்ப்பனவு செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| | (ii) இலக்கம் 571 | நான்கு ஆண்டுகளுக்கு மேலாக ரூபா 1,767,198 காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரால் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்திற்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (இ) | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 17 மே 2017 ஆம் திகதிய PL/15/5/separation/U இலக்க அறிவுறுத்தல் | சபையினால் சேகரிக்கப்படும் குப்பைகளை தரம் பிரித்து அகற்றுவதற்கான நடைமுறையானது பேணப்பட்டிருக்கவில்லை. | உரிய நடைமுறைகளை பின்பற்றி குப்பைகள் தரம் பிரித்து அகற்றுவதற்கான நடவடிக்கை மேற்க்கொள்ளப்படும். | சுற்றறிக்கைகளுக்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,032,089 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,797,329 ஆக இருந்தது.

## 2.2 நிதிசார் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் பேணிச்செல்லப்பட்ட மக்கள் வங்கி நடைமுறைக் கணக்கானது நீண்டகாலமாக செயலற்று காணப்பட்டதுடன் ரூபா 44,509 மீதியானது தொடர்ந்து கணக்கில் செயற்பாடற்ற மீதியாக இருக்கின்ற போதும் இவ் விடயம் தொடர்பாக சபையினால் நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதி பெற்று குறித்த கணக்கினை முடிவுறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது | நீண்டகாலமாக செயலற்று காணப்படும் நடைமுறைக் கணக்கு தொடர்பாக உரியநடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2019 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | 31.12.2019 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | 31.12.2018 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரிகளும் வரிகளும் | 357,200 | - | 347,800 | 352,000 | 599,480 | 247,480 |
| ii. | வாடகைகள் | 6,282,400 | 435,710 | 978,067 | 14,194,766 | 17,373,534 | 3,178,768 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 395,000 | - | 620,997 | 585,000 | 554,457 | (30,543) |
| iv. | ஏனைய வருமானம் | 4,004,483 | - | 288,347 | 5,331,220 | 7,460,618 | 2,129,398 |
| | | **11,039,083** | **435,710** | **2,235,211** | **20,462,986** | **25,988,089** | **5,525,103** |

### 2.3.2 வாடகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குரித்தான சந்தைக்கடை மற்றும் மரக்கறிகடை என்பவற்றிலிருந்து நான்கு ஆண்டுகளுக்கு மேலாக பெறவேண்டிய வாடகை நிலுவை ரூபா 221,560 இனை அறவிட சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆய்வு உத்தியோகத்தர் மூலம் பரிசீலித்து தீர்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | உரிய காலத்தில் வாடகை நிலுவையினை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

### 2.3.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,219,634 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா.3,821,736 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உரிய காலத்தில் நிலுவையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொது சுகாதாரம், பொதுப் பயன்பாடு சேவைகள் மற்றும் பொது வழிகள் மற்றும் மக்கள் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 23 ஆம் திகதிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2018/61 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்திக்கு கடல்கள் மற்றும் கடல்சார் வளங்களை பாதுகாப்பதுடன் நிலைத்திருக்கும் வகையில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மற்றும் கடல், கடலோர மாசு கட்டுப்பாடுகள் தொடர்பான திட்டங்கள் எவையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் | நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைவதற்கு கடல்கள் மற்றும் கடல்சார் வளங்கள் பாதுகாப்பதற்கும் உரிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் சபையின் ஜேசிபி (JCB) வாகன வாடகை மூலம் பெறப்பட வேண்டிய ரூபா 41,300 தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருமான நிலுவையை பெற்றுக் கொள்ள உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | நிலுவையினை பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (ஆ) 2018 ஆம் ஆண்டில் சபையின் கலாச்சார மண்டப வாடகை மூலம் பெறப்படவேண்டிய ரூபா 50,000 கடந்த இரண்டு வருடங்களாக பெறப்படாமல் உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. | வருமான நிலுவையை பெற்றுக் கொள்ள உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் | நிலுவையினை பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.3.1 சொத்துக்களிலிருந்து பெறவேண்டிய வருமானத்தை பெறத் தவறியமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை நிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட தேக்கம் உணவு விடுதி திருத்தத்திற்காக மரியாள் சனசமூக நிலையத்திற்கு ரூபா 94,103 செலுத்தப்பட்டு 07 மார்ச் 2019 இல் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் இற்றைவரை பாவனையிலீடுபடுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் | கட்டடத்தினை பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

**3.3.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் 2019 ஆம் ஆண்டிற்கான ஐந்தொகையில் காணி கட்டிடங்களாக காட்டப்பட்டுள்ள ரூபா 309,623,434 பெறுமதியான நிலையான சொத்துக்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு காணிகளின் உரித்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் எவையும் சபையில் காணப்படவில்லை. | எதிர்காலத்தில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் | உரிமை மாற்றம் செய்யப்படாத காணிகளை உரிமை மாற்றம் செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3.3 வாகனங்களின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 10 யூலை 2015 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2015 இன் பிரகாரம் சபையினால் பாவனையிலீடுபடுத்தாமல் காணப்படும் ரூபா 202,000 பெறுமதியான இரண்டு வாகனங்கள் தொடர்பில் திருத்தி பாவிப்பதற்கோ அல்லது பாவனையிலிருந்து அகற்றுவதற்கோ சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் | சுற்று நிருபத்தின் பிரகாரம் உரியநடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் மதிப்பீட்டு செலவினத்திற்கும் உண்மைச் செலவினத்திற்கும் இடையிலான வேறுபாடுகளின் வீச்சானது 7 சதவீதத்திற்கும் 66 சதவீதத்திற்கும் இடையிலானதாக காணப்படுகின்றமையால் இப்பாதீடு ஒரு வினைத்திறனற்ற பாதீடாக காணப்படுகின்றது. | எதிர் காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் இடம் பெறாமல் இருக்க கூடிய கவனம் செலுத்தப்படும். | பாதீடு தயாரிக்கப்படும் போது வினைத்திறனான கட்டுப்பாடுகளை கருத்திற் கொண்டு பாதீடு தயாரிக்கப்பட வேண்டும். |